முரசொலி பாசறை

மதுரை 29.02.2024

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் **சென்னை வர்த்தக மையம்.**

# இடம் பொருள் கலைஞர் 59






# சென்னை வர்த்தக மையம்!

## தொழில் வளர்ச்சியின் நிரந்தர அடையாளம்

உலக முதலீட்டாளர்கள் மாநாடு, பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி, கணித்தமிழ் மாநாடு என உலகின் பார்வையை, தமிழ்நாட்டை நோக்கித் திருப்பிய சமீபகால நிகழ்வுகள் எல்லாம் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றிருக்கின்றன. அந்த நிகழ்வுகளின் வெற்றிக்கு அந்த மையமும் ஒரு காரணம் என்று சொன்னால், அது மிகையில்லை.



விசாலமான, குளிரூட்டப்பட்ட அரங்கங்கள், சிறந்த முறையில் இயங்கும் ஒலி ஒளிக் கட்டமைப்புகள், வாகனங்கள் நிறுத்துவதற்கான இடவசதி, விமானம், ரயில், பேருந்து நிலையங்களை உடனடியாக அணுக ஏதுவான இடத்தில் அமைந்திருப்பது என இந்த வர்த்தக மையம், பெருநகரச் சென்னையின் இன்னொரு அடையாளமாகத் திகழ்ந்து வருகிறது.

சென்னை, கிண்டி, கத்திப்பாராவிலிருந்து சுமார் 1.5 கிலோ மீட்டர் தூரத்தில் பூந்தமல்லி செல்லும் சாலையில் உள்ள நந்தம்பாக்கம் எனும் இடத்தில் பிரமாண்டமாக வீற்றிருக்கிறது, இந்த நிரந்தரப் பொருட்காட்சிக் கூடம். இங்கே ஆண்டு முழுவதும் வணிகச் சந்தைகள், பொருட்காட்சிகள், வர்த்தக விழாக்கள் போன்றவை மட்டுமல்லாது அரசியல் கட்சிகள், கல்விநிலையங்கள் ஆகியவற்றின் நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

தொழிற்துறையில் தமிழ்நாடு வேகமாக வளர்ந்து வந்த காலத்தில், உலக அளவிலான நிறுவனங்களின் கவனத்தை ஈர்த்து, இங்கே அவர்கள் வந்து தங்களின் சிந்தனைகளைப் பரிமாறிக்கொள்ள ஏதுவான ஓர் இடம் வேண்டும் என்று கணித்து, நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான கழக அரசின் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்டதுதான் இந்த மையம்.

### உலகளாவிய போட்டிக்குத் தயார்!

ஒன்றிய அரசில் முரசொலி மாறன் அவர்கள் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சராக இருந்தபோது, அவரது முன்னெடுப்பால் தமிழ்நாடு அரசின் தொழில் மேம்பாட்டுக் கழகம் (டிட்கோ), இந்திய அரசின் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து, கண்காட்சி மற்றும் மாநாட்டுக் கூடத்துடன் கூடிய வர்த்தக மையம் ஒன்றை, சென்னையில் 2 இலட்சம் சதுர அடி பரப்பளவில் அமைக்கத் திட்டமிடப்பட்டது.

இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் 51 சதவிகிதமும் மற்றும் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் 49 சதவிகிதமும் பங்களிப்புச் செய்து இந்நிறுவனம் தொடங்கப்பட்டது. இந்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை உலகளாவிய போட்டியை எதிர்கொள்ளும் வகையில், தொழில் கண்காட்சிகளை நடத்தி, அதன் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த மையத்தின் நோக்கமாக உள்ளது.

இந்த மையத்தை அமைக்க, 25.48 ஏக்கர் பரப்பளவிலான நிலத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அரசு வழங்கியது. இந்த வர்த்தக மையம், 10,560 சதுரடியில் மூன்று குளிர்சாதன வசதி செய்யப்பட்ட கண்காட்சி அரங்கங்களையும், ரூபாய் 60 கோடியே 60 இலட்சம் செலவில், 2 ஆயிரம் பேர் அமரக்கூடிய கூட்டரங்கையும் உள்ளடக்கியது. இந்த மையத்துக்கான கட்டுமானப் பணிகள் 2000-இல் தொடங்கப்பட்டு, 2001 மார்ச் 31 அன்று கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



இந்த வர்த்தக மையத்தில், 24 மணி நேர மின்சார வசதி, பாதுகாப்பு, ஆண்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்குத் தனித்தனியான கழிவறை வசதிகள், ஏ.டி.எம்., வரவேற்பு அறை, சிறப்பு விருந்தினர்களுக்கான வி.ஐ.பி. அறை, ஊடக அறை, ஒப்பனை அறை, சந்திப்புக் கூட்டங்களுக்கான அறை, வைஃபை வசதி, நிகழ்ச்சி நடைபெறும் நாட்களில் விருந்தினர் உபசரிப்பு வசதி என கால மாற்றத்துக்கு ஏற்றாற் போன்று அவ்வப்போது புதிய புதிய வசதிகள் சேர்க்கப்பட்டு வருகின்றன.

### தொழில் வளர்ச்சிக்கேற்ற விரிவாக்கம்

புத்தாயிரத்துக்குப் பிறகான ஆண்டுகளில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் முன்னேறிக் கொண்டிருந்தது. அந்த வளர்ச்சிக்கு ஏற்றாற்போல இந்த மையத்தையும் விரிவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. கலைஞர் தலைமையிலான கழக அரசு 2006-2011 ஆட்சியமைத்த காலத்தில், 2010-இல் மட்டும் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக 84 கண்காட்சிகளையும், 107 கூட்டங்களையும் நடத்துமளவுக்கு, தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் சிறப்பாகச் செயலாற்றி வந்தது.

எனவே, அந்தச் சமயத்தில் இருந்த வர்த்தக மையத்தின் பரப்பளவு, நாட்டிலுள்ள பிற வர்த்தக மையங்களின் பரப்பளவைவிடக் குறைவாக இருந்ததால், உலகளாவிய மிகப் பெரிய வர்த்தகம் மற்றும் தொழில் கண்காட்சிகளை, சென்னையில் நடத்த இடவசதி போதவில்லை. எனவே, சென்னை வர்த்தக மைய விரிவாக்கத்தின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, அன்று துணை முதலமைச்சராக இருந்த இன்றைய நம் கழகத் தலைவர் அவர்கள் 2010 மே 3 அன்று சட்டப்பேரவையில் நடைபெற்ற தொழில்துறை மானியக் கோரிக்கையின் போது சென்னை வர்த்தக மைய விரிவாக்கத் திட்டத்துக்கான அறிவிப்பினை வெளியிட்டார்.

அதன் அடிப்படையில், தொழில்துறை வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில், சென்னை வர்த்தக மையம் உலகத்தரத்தில் விரிவாக்கப்பட்டது. ரூபாய் 250 கோடி மதிப்பீட்டில், பல அடுக்குக் கண்காட்சி அரங்குகள் மற்றும் இரண்டு அடுக்கு அடித்தளங்கள் கொண்ட வாகனங்கள் நிறுத்தும் வசதிகளுடன் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. மேற்படி விரிவாக்கத்தின் மூலம், தரைத்தளம் மற்றும் முதல் தளங்களில் தலா 6 குளிர்சாதன வசதி கொண்ட கண்காட்சி அரங்குகள் ஒவ்வொன்றும் 66 ஆயிரம் சதுரடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளன. அடித்தளத்தில் 74 ஆயிரம் சதுரடி பரப்பளவில், 2 ஆயிரம் கார்களும், 2 ஆயிரம் இரு சக்கர வாகனங்களும் நிறுத்தும் அளவுக்குக் கட்டப்பட்டன.

மேலும் அந்த விரிவாக்கத்தில், உணவுக்கூடம், நூலகம், கூட்டரங்கம், பேரிடர் மேலாண்மை முறை மற்றும் இதர வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன. இந்த விரிவாக்கத் திட்டத்தை அன்றைய துணை முதலமைச்சர் அவர்கள் 2011-ஆம் ஆண்டு பிப்ரவரி 26 அன்று தொடங்கி வைத்தார். விரிவாக்கப் பணிகள் நிறைவு பெற்ற பின், நாட்டிலேயே சிறந்த தொழிற்கண்காட்சி வளாகமாக சென்னை வர்த்தக மையம் அமைந்தது.

...வலம் வருவோம்

## நாடு தவறாக வழி நடத்தப்படுகிறது!

பதஞ்சலி நிறுவனத்தின் விளம்பரங்களில் போலியான தகவல்கள், உண்மைக்குப் புறம்பான தகவல்கள் சொல்லப்படுவதாக உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. குறிப்பாக, அந்த விளம்பரங்களைத் தடுக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

பதஞ்சலி நிறுவனம், ஆன்மிகத்தின் பெயரால் ஆயுர்வேத மருந்துகளை விற்பனை செய்து வருகிறது. அவர்களின் விளம்பரங்களில் அலோபதி மருத்துவத்தைக் குற்றம் சாட்டுவதும், குணப்படுத்தவே முடியாத நீண்ட கால நோய்கள், மரபணு நோய்கள் ஆகியவற்றுக்கு நிரந்தரத் தீர்வுகளைத் தருவதாகக் கூறுவதும் சர்ச்சையானது. இது தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற நிலையில், கடந்த ஆண்டு நவம்பர் மாதமே இந்த விளம்பரங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என உச்சநீதிமன்றம் கூறியது. இந்த நிலையில் தற்போது பதஞ்சலி நிறுவனத்தின் விளம்பரங்களைக் கட்டுப்படுத்தாமல், ஒன்றிய அரசு கண்களை மூடிக் கொண்டு இருப்பது ஏன் எனக் கேள்வி எழுப்பியுள்ளதுடன், அவர்கள் விளம்பரங்களுக்குத் தடை விதித்தும் உத்தரவிட்டுள்ளது நீதிமன்றம்.

ஆன்மிகத்தின் பெயரால் மத அடிப்படைவாத அரசியல் செய்பவர்களிடம், மத அடிப்படைவாதத்தின் பெயரில் போலித் தகவல்கள் மூலம் மருந்துகளை விற்பவர்களைத் தடுக்கச் சொன்னால் தடுப்பார்களா? குறிப்பாக, இதுபோன்ற விளம்பரங்களால் நாடு தவறாக வழி நடத்தப்படுகிறது என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்து, பதஞ்சலிக்கு மட்டுமல்ல என்பதை, மக்கள் அறிந்து கொள்ளும் நாள் தொலைவில் இல்லை.

## ஃப்ளாஷ்பேக்



### மரியாதை!



இராஜேந்திரன்

நெருக்கடி நிலை சிறை வாசத்துக்குப் பின், இன்றைய முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், அப்போது நெல்லைக்கு வருகை தந்தார். மதுரை விமான நிலையத்திலிருந்து குற்றாலம் வரை, தளபதியின் காரோட்டியாக இருந்தவர் எனது மாமனார் பி.முருகன். அவர் இறந்ததைக் கேள்விப்பட்ட தளபதி அவர்கள், 2003-ஆம் ஆண்டு ஜனவரி 25-அன்று வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்துக்கு, பாளையங்கோட்டைக்கு வருகை தந்தபோது எங்கள் இல்லத்துக்கு வந்து மறைந்த எனது மாமனார் படத்துக்கு மாலையிட்டு மரியாதை செய்தார். எங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் ஆறுதல் கூறினார்.

**-கவிஞர் பே.இராஜேந்திரன்,**
**பொதிகைத் தமிழ்ச் சங்கம்,**
**திருநெல்வேலி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சட்டமன்றப் பாடம்!

**1980-ஆம் ஆண்டு, சட்டமன்றத் தேர்தலில் சென்னை, அண்ணா நகர் தொகுதியில் வெற்றிபெற்ற கலைஞர், எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப் பேற்றார். சட்டமன்றத்தில் அவர் ஒரு மணி நேரம் பேசினால், அதற்கு பதில் அளிக்க அமைச்சர்களுக்குப் பலமணி நேரம் தேவைப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவராக அவர் இருந்த காலத்தில், எதிர்க்கட்சியினருக்கு சட்டசபைப் பாடம் நடத்தினார். கழகத்தினரும் கற்றுக்கொண்டனர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 403




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.